# நடுகல்லும் சதிகல்லும்

முனைவர் இரா.இராமகுமார்
உதவிப் பேராசிரியர் & நெறியாளர்
தமிழ் உயராய்வு மையம், விவேகானந்தா கல்லூரி
அகஸ்தீஸ்வரம்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## அறிமுகம்

மனிதனின் இறை நம்பிக்கையைத் தொடர்ந்து எழுந்த வழிபாட்டு முறைகள் யாவும் பயத்தின் அடிப்படையிலயே எழுந்தன. இடி, மின்னல், மழை, வெப்பம், கொடிய விலங்குகள் ஆகியன மானுட வர்க்கத்தைப் பயமுறுத்தின. அதேவேளையில் மரங்கள் நிழலையும் கனிகளையும் தந்தன. இந்நிலை வளர்ச்சி காரணமாகவே இறைபக்தி ஏற்பட்டது எனலாம். இப்பக்தி நிலையே பரிணமித்து வழிபாட்டு முறைகளாய் மாற்றம்பெற்றன. மரங்கள் மனிதனின் குலக்குறி வழிபாட்டு நம்பிக்கையின் அடையாளமாக விளங்கின. மானிடக் குலம் இறைசக்திக்குப் படையல்கள், பலிகள் இட்டு வழிபட்டு வந்தனர். இயற்கை வழிபாடு உருவ வழிபாடாக வளர்ச்சியடைந்து நிலைபெற்றது. நடுகல் வழிபாடு மற்றும் சதிகல் வழிபாடு போன்றவை பெரும்பாலான மக்களால் பின்பற்றப்பட்டு வந்தன. இறந்துபட்ட முன்னோர்களை வழிபடும் வழக்கம் மிகத்தொன்மையானது. உலகம் முழுவதும் இவ்வழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது என்பதனை ஆய்வாளர்கள் பலரும் பல்வேறு காலகட்டங்களில் விளக்கியுள்ளனர். இறந்துபட்ட முன்னோர்களின் வழிபாடே பிற்காலத்தில் கடவுளர் உருவங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாயின என்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கள், இன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## திருப்புமுனை

இங்கிலாந்து நாட்டவரான கிராண்ட் ஆலன் என்பவர் கடவுளின் பரிணாமம் என்னும் நூலில், ”சமாதியின் மேல் நட்டு வைக்கப்பட்ட மரத்தாலான முளைகள்தான், சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட மரச் சிலைகள் தோன்றுவதற்குரிய திருப்பு மையத்தை உருவாக்கி இருக்கக்கூடும். செமிடிக் இனத்தவரால் பெரிதும் புனிதமாகப் போற்றப்படுகிற கூர் உருளைகளும், மரத்தூண்களும் தோன்றுவதற்குக்கூட, இந்த மர முளைகள்தான் காரணமாகும். இதைப் போலவே சமாதியின் மேல் உருட்டி விடப்பட்ட சொரசொரப்பான பாறைகளும், நட்டு வைக்கப்பட்ட நடுகற்களும் தான் உலகெங்கிலுள்ள பண்பட்ட சமூகங்களில் காணப்படுகிற, பொதுவான வழிபாட்டு உருவமாகத் திகழும் கற்சிலைகளும், பளிங்குச்சிலைகளும் தோன்றுதற்குரிய திருப்பு மையத்தையும் உருவாக்கின.” என்கிறார். முதன்முதலில் இத்தகைய கற்கள் வெறும் கற்பாறைகளாகவும், வெட்டி

உருவாக்கப்படாத கல் துண்டுகளாகவுமே கிடந்துள்ளன. இறந்தவர்கள் மீண்டும் வந்து உயிரோடு இருப்பவர்களைத் துன்புறுத்தாமல் தடுக்கும் பொருட்டுதான் இக்கற்பாறைகளைச் சவக்குழிகளின் மேல் உருட்டிவிட்டனர். நாளாக நாளாக இந்தக் கற்களைச் சதுர வடிவமான கற்பலகைகளாக ஒழுங்குபடுத்தினர். கடைசியாக இவைகளின் மேல் மனிதத்தலையும், தோளும் பொருந்திய கரடுமுரடான பிரதிபிம்பங்கள் செதுக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டன என்று நடுகல் வழக்கம், உருவ வழிபாடாக மாறி வந்த வழியைக் கூறுகிறார். தொல்காப்பியர் காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய இந்நடுகல் வழிபாடு, தமிழகத்தில் பண்பாட்டுத் தொடர்ச்சியையும், வீரச்செயல்களையும் அச்செயல்பாடுகளினால் இறந்துபட்ட மறவர்களின் புகழையும் வெளிப்படுத்துகின்றனவாக விளங்குகின்றன.

**நடுகல் வழிபாட்டின் தோற்றம்**

கற்களை அடையாளமாக நடுவதால் "நடுகல்" எனப்பட்டது. இம்முறை ஒரு வகையில் சிவநெறியில் லிங்கத்தை நடுவது போன்றதாகும். நடுகல் நாட்டுப்புற முறையாகவும், பள்ளிப்படைகோயில் (மன்னர்கள் இறந்த இடத்தில் கல்நட்டுக் கோயில் எழுப்புதல்) அரசபாணியாகவும் கருதப்பட்டது. சங்க காலத்தில் தன்னால் இயன்றவரையில் போர்புரிந்து உயிர்விட்ட வீரனது உடலைப் புதைத்த இடத்தில் (அ) எரித்த இடத்தில் ஒரு கல்லை நடுவர். அக்கல்லில் அவனது உருவத்தையும், பெயரையும் இன்ன போரில், இவ்வாறு போர்புரிந்து மாண்டான் என்ற விவரத்தையும் பொறிப்பர். இக்கல்லே நடுகல் எனப்படும்.

கற்குவைகளால் மூடப்பட்ட நடுகல், "கற்பதுக்கை" என்னும் பெயரில் அழைக்கப்பட்டது. போரில் ஈடுபடும் வீரர்கள் வெற்றிவாகை சூடி வரவேண்டுமென்று அவர்தம் மனைவிமார்கள் தம் குடி முன்னோரின் நடுகல் முன் அமர்ந்து வழிபட்டனர். நன்னனுடைய மலைகள் மீது இத்தகைய நடுகற்கள் அதிகளவில் இருந்தன. அவ்வழியாகச் சென்ற கூத்தர், பாணர் போன்றோர் யாழ் வாசித்து அத்தகைய நடுகல் வீரர்களை வழிபட்டுச் சென்றனர்.

**நடுகலின் சிறப்புக்களும் வேறுபெயர்களும்**

தொல்காப்பியர் கூறும் புறத்திணையியலுக்கு வரலாற்று அடித்தளம் உண்டென்று இன்றுவரை வெளிப்படுத்தப்பட்டுள்ள நடுகற்கள் உறுதி செய்துள்ளன. செங்கல்பட்டு, சேலம், கோவை, தர்மபுரி, தென்னாற்காடு முதலிய மாவட்டங்களிலும், பிற மாவட்டங்களிலும் கண்டெடுக்கப்பட்ட நடுகற்கள் காலந்தோறும் மாறிவரும் கலைப் பாணிகளுக்கு ஏற்ப, உருவ அமைதியிலும், எழுத்தமைதியிலும் மாற்றங்களோடு காணப்படுகின்றன. தனித்தமிழ் எழுத்திலும், கிரந்தம் தமிழ் எழுத்துக்கள் கலந்தும், வட்டெழுத்தோடு தமிழ் எழுத்துக்கள் கலந்தும், தனி வட்ட எழுத்திலும் பொறிக்கப்பட்ட பல நடுகற்கள் தமிழ்நாடெங்கும், தொல்பொருள் ஆய்வுத் துறையினராலும், தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்களில் அவ்வீரர்களுக்குரிய பெயரும், புகழுக்குரிய வீரச்செயலும் பொறிக்கப்பட்டுள்ளன.

> **"மறவர் பெயரும் பீடும் எழுதி" (அகநானூறு 67)**
>
> **"பட்டோர் பெயரும் ஆற்றலு மெழுதி நட்ட கல்" (திருவாரூர் மும்மணிக் கோவை)**

என்னும் இலக்கிய வரிகள் நடுகல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் முதன்மையானத் தகவல்கள் எவை என்பதைத் தெரிவிக்கின்றன. பட்டோர் பெயரும், ஆற்றலும் எழுதி நட்ட கல் என்று நடுகல்லுக்கான இலக்கண வரம்பு என்று கூறப்பட்டாலும், தமிழகத்தில் கிடைத்துள்ள நடுகற்கள் சிலவற்றில் எழுத்துப் பொறிப்பு ஏதுமின்றி இறந்துபட்ட வீரனின் உருவத்தியையும், அவன் செய்த வீரச் செயலையும் சிற்பமாக வடித்துள்ளனர். தமிழகத்தில் வாழும் பல்வேறு மக்களிடத்திலும், இக்காலத்திலும், இறந்தோருக்குச் செய்யும் இறுதிக் கடனில், கல்லெடுப்பு அல்லது கல்நிறுத்தம் என்னும் சடங்கு, நடுகல் வழிபாட்டின் வழிவந்தவை என்பது மறுக்கவியாலாத உண்மையாகும்.

தமிழகத்தில் நடுகல் வழிபாடு பற்றி ஆய்வு செய்தோர்கள் இதனை நரை மீட்டோர் கல், வடக்கிருந்தோர் கல், பத்தினிப்படிமக்கல், கடலுள் மாய்ந்தோர் கல், ஊர்காத்தான் கல், பெண் மீட்டான் கல், அறம் காத்த நடுதல் கல், கழி பேராண்மைக் கல், சாவாரப்பலிக்கல், அடியார் சமாதி, அரசர் பள்ளிப் படை, புலிக் குத்திக் கல், பன்றிக் குத்திக் கல், குதிரைக் குத்திக் கல், எருது பொருதார் கல், மாடுபொறித்த கல், யானைப் போர் நடுகல், நாய்க்கு நிடுகல் என இவற்றை வகைப்படுத்தியுள்ளனர்.

போரில் இறந்தவர் அல்லாமல், அறிவிலும் ஒழுக்கத்திலும் மிக்கார் நினைவின்பொருட்டு "கல் எடுத்தலும்" உண்டு. சங்கச் செய்யுள் ஒன்றில் மங்கையின் வீரம் பற்றிக் கூறும்போது, "எந்தை, முன் நடந்த போரில் இறந்துபட்டு கல் ஆனான்" என மங்கையின் கூற்றாகப் புலவர் குறிக்கிறார். "பன்றிகுத்திப்பட்டான் கல்" என்பது கோவை மாவட்டத்தில் உள்ள ஒரு நடுகல்லாகும். நடுகல் எடுப்பு விழா அறுவகைப்படும். கற்காண்டல், கால்கோள், கல்லை நீர்ப்படுத்துதல், கல்லை நடுதல், வீரன்-பெயர்-செயல் பொறித்தல், கால்கொண்ட தெய்வத்திற்குச் சிறப்புச் செய்து வாழ்த்துதல். செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தமை இதே மரபினதாகும்.

**நடுகல் வணக்கம்**

தாய்நாட்டின் பொருட்டு போரிட்டு உயிர்நீத்த வீரத்தமிழனுக்கு நினைவுக்கல்லை நட்டு அவ்வீரனைப் போற்றுதல் மற்றும் அவனை சான்றாகக்கொண்டு மற்ற தமிழர்கள் நடக்கமுயலுதல், அவனது புகழ் உலகம் உள்ளளவும் நிலவுக! என்பன நடுகல் வணக்கத்தின் சிறப்புக்களாகும். வீரர்கள் மட்டுமல்லாது, விலங்குகளின் நினைவாகக்கூட நடுகற்கள் நடப்பட்டுள்ளன. காளைகளின் நினைவாக நடப்பட்ட நடுகற்கள் தும்கூர் மாவட்டத்தில் (கர்நாடக மாநிலம்) அதிகளவில் காணப்படுகின்றன. தமிழகத்தில் நெல்லை மாவட்டம் கங்கை கொண்டானுக்கு அருகிலுள்ள குப்புக்குறிச்சி என்னுமிடத்தில் "பசுக்கூட்டம்" என்றழைக்கப்படும் இத்தகைய நடுகற்கள் காணப்படுகின்றன.

**நடுகல் கண்டுபிடிப்பு**

எகிப்து நாட்டில் பிரமிடுகள் எவ்வாறு வரலாற்றுச் சின்னங்களாகத் திகழ்கின்றனவோ, அதே போன்று தமிழகத்தில் "நடுகல்" திகழ்கிறது. இவ்வாறு எழுப்பப்பட்ட நடுகல்லை முதலில் கண்டெடுத்தவர் சுந்தரம் பிள்ளை. ஆரல்வாய்மொழியை (கன்னியாகுமாரி மாவட்டம்) அடுத்துள்ள கோட்டைக்கரையில் பாண்டிய மன்னன் மாறன்சடையனின் காலத்தில் வட்டெழுத்தில் செதுக்கப்பட்ட ஒரு நடுகல்லைப் பேராசிரியர் கண்டறிந்தார். இரணகீர்த்தி (மாறன் சடையனின் படையைச் சேர்ந்தவன்) என்ற வீரனது நினைவாக நடுகல் நடப்பட்டிருப்பதை வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து பல நடுகற்கள் தமிழகம் முழுவதும் வரலாற்று ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டன.

**சதிகல் வழிபாடு**

நடுகல் வழிபாட்டிற்கும் சதிகல் வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கணவனது இறப்பினை அறிந்தவுடன், தீயினுள் பாய்ந்து இறக்கும் பெண்களின் நினைவாக நடப்படும் கல் "சதிகல்" எனப்பட்டது. மணிமேகலையில் பத்தினிப்பெண்டிர் மூவகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

1. கணவனுடன் தீயினுள் மூழ்கி இறப்பவர் .
2. தனியே தீ வளர்த்து அதனில் வீழ்ந்து இறப்பவர் .
3. கணவனை நினைத்து அடுத்தப் பிறவியில் அவனுடன் வாழ்வதற்காக, கைம்மை நோன்பு நோற்பவர்.

ரிக்வேதத்திலும், அதர்வண வேதத்திலும் ”சதி” பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. உடன்கட்டை ஏறும்போது சொல்லவேண்டிய மந்திரங்களும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. (ரிக். 10.18.8: அத.28,3.1) இதன் வாயிலாக உடன்கட்டை ஏறுதல் வழக்கத்தின் பழைமையை உணரலாம்.

**நற்சோணையம்மன்**

சேரன் செங்குட்டுவன் கி.பி 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். சேரன் செங்குட்டுவனின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மறைந்தபோது, குலவழக்கப்படி நெடுஞ்சேரலாதனின் மனைவியான ”நற்சோணை” என்ற சோழ மகள் உடன்கட்டை ஏறினாள். செங்குட்டுவன் தன் தாயாரின் நினைவாகக் கோயில் எடுக்க எண்ணி, இமயமலையிலிருந்து கல் கொண்டுவந்து கோயில் எடுத்தலே சிறப்பு எனக்கருதி இமயத்தின் மீது படையெடுத்துக் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி நாடு மீண்டான். “நற்சோணையம்மன்” சேரர் குலதெய்வம் ஆனாள். தீப்பாய்ந்து இறந்த மறப்பெண்டிர் வம்சத்தார்க்கு மன்னர்களும், செல்வந்தர்களும் நிலங்களைத் தானமாக வழங்கினார். அவ்வாறு வழங்கப்பட்ட நிலங்கள் உதிரப்பட்டி, ரத்தக்காணி, தீப்பாஞ்சகாணி எனக் குறிக்கப்பட்டன.

**பத்தினித் தெய்வ வழிபாட்டுப் பரவல்**

உடன்கட்டை ஏறிய பெண்கள் பத்தினித் தெய்வமாகவும் வணங்கப்பட்டனர். கோவலனை இழந்த கண்ணகி மதுரையைவிட்டுப் புறப்பட்டு வைகைக்கரை வழியே ஆவேசமாகச் சென்றாள். பின்னர் வருஷநாடு மலைவழியாக சுருளிமலையின் மேற்குத் தொடர்ச்சியான மங்கலதேவி மலையை அடைந்தாள், கண்ணகி, தெய்வமான இடம் இதுவேயாகும். சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் நினைவாக இவ்விடத்தில் கோயிலை உருவாக்கினான்.

முதலாம் இராசராசன், மங்கலதேவி கோட்டத்திற்கு வந்து கண்ணகியின் சிறப்பை உணர்ந்து, திருப்பணி செய்ததோடு மட்டுமல்லாது, பிடிமண் எடுத்துச் சென்று தஞ்சையில் பத்தினித் தெய்வ வழிபாட்டைத் தொடங்கி வைத்தான். இக்கோயில் சிங்கள நாச்சியார் - செங்கள நாச்சியார் என்று வழங்கி பின் செங்களாச்சியம்மன் கோயிலாக தற்போது உள்ளது. யாழ்ப்பாணத்தில் முதலாவதாக கண்ணகிக்குக் கோயிலமைத்த இடம் ”அங்கணக்கடவை” எனப்படுகிறது.

**நிறைவுரை**

வழிபாடு என்பது மனம் நவிலும் மந்திரமாகும். இதயம் இறைவன் வாழும் ஆலயமாகப் பக்தி இலக்கியங்கள் பறைசாற்றினாலும் மானிட குலம், வழிவழியாக வந்த வழிபாட்டு நிலையைப் போற்றத் தலைப்பட்டனர். வரலாறு நடுகல்லை பதிவு செய்ததினைப் போன்று சதிகல்லைப் பதிவு செய்யவில்லை என்பது சிந்திக்க வேண்டியதொன்றாகும்.